28.3.2007

13.11.06

# ஏழைதாசன்

**உலகத் தமிழர்களின் ஒப்பற்ற குரல்**

❖ நவம்பர் - 2006 ❖ இதழ் எண் : 141 ❖ விலை ரூ. 5/-

**தமிழ்க் கவிதை போதனையாளர் !**
**முதல் இணைய சாதனையாளர் !**



கவிஞர் **இரா. இரவி,**
செயலர், மாமதுரைக் கவிஞர் பேரவை.

24 மணி நேரமும் குறுஞ்செய்தி (SMS) அனுப்புங்களேன் !
இலக்கம் : **94 42 77 68 68**

மேலதிக விபரங்களுக்கு அனுப்புங்களேன் !
இலக்கம் : **94 42 77 68 68**

அக்குபஞ்சர்,

# மாற்றுமுறை மருத்துவப்பயிற்சி



1 வருடம் டிப்ளமோ பயிற்சி, ரெகுலர் மற்றும் தொலை தொடர்புப் பயிற்சி

இடம் :
உங்கள் தாய் வீடாகிய
**அப்துல்லா மிஷன் மருத்துவமனை, காரைக்குடி.**

**ஒவ்வொரு மாதமும் 3 நாட்கள் காண்டாக்ட் செமினார் வகுப்புகள் மற்றும் நேரடிப் பயிற்சி காரைக்குடியில் நடத்தப்படுகிறது.**

அக்குபஞ்சர், காந்த சிகிச்சை, கொரியன் சுஜோக் அக்குபஞ்சர், டி-அடிக்ஷன், எலக்ட்ரோ ஹோமியோபதி, மலர் மருத்துவம், ஹிப்னோ யோகா, ப்ராணிக் சிகிச்சை, ரெய்கி அக்குபஞ்சர் சிகிச்சை, யோகா, தியானம், ரெஃப்லக்சாலஜி, நாடி பரிசோதனை அக்கு டச் போன்ற பலதரப்பட்ட சிகிச்சை முறைகளில் பயிற்சியளிக்கப்படுகிறது.

## அக்குபஞ்சர் நிபுணர் பயிற்சி

டிப்ளமோ பயிற்சி பெற்றவர்கள் இலங்கை பல்கலைக்கழக மேற்படிப்பு பெறவும், பல்கலைக்கழக சான்று பெறவும் பயிற்சி அளிக்கப்படும்.

*ப்ராஸ்பெக்டஸ், கட்டணம் மற்றும் இதர அனைத்து விபரங்களுக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :*

## அப்துல்லா மிஷன் மருத்துவமனை

பெரியார் சிலை அருகில், காரைக்குடி – 630 001.

CELL : 98424 – 23082 PH : 04565 – 233735, 238082

சென்னை, கோவை, மதுரை, தர்மபுரி, காரைக்கால், கும்பகோணம், செங்கல்பட்டு, காரைக்குடி ஆகிய இடங்களில் வெவ்வேறு தேதிகளில் செமினார் வகுப்புகள் நடைபெறுகிறது.

**போன் எண்கள் :**

சென்னை (வேளச்சேரி): 044-22435471 சென்னை (தாம்பரம்) : 044-22273786, 94441 – 80416, 92821 – 11618. கோவை : 0422 – 2570210 . மதுரை : 94434 – 08460, 0452 – 5536201. தர்மபுரி : 04342 – 570749, 94435 – 09839 காரைக்கால் : 94430 71284. கும்பகோணம் : 0435 – 2442259. 94437 – 43259 செங்கல்பட்டு : 044 – 27426163.

# கி.பி. 2035 இல் தமிழன் பெயர் எப்படி இருக்கும்?

தமிழ்ப்பற்று மிக்கவர் செல்லமுத்து. 'செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே' என்று பாடினாரே பாரதியார், அதுபோல இன்பத்தேன் போன்ற இனிய பெயர்கள் தேன்மலர், முல்லை, பாவை, இனியாள், அமுதன், கனியமுது இப்படி தான் பெற்ற செல்வங்களுக்கு தூயத் தமிழில் பெயர் வைத்து மகிழ்ந்தார் செல்லமுத்து.

தூய தமிழ்ப் பெயர்களைத் தாங்கி வளர்ந்த பிள்ளைகள் பிற்காலத்தில் அவர்களுக்குப் பிறந்த குழந்தைகளுக்கு அர்த்தினி, வினிஸ்தா, நிஷாஷனி, நிதீஸ், கிஷன் என்றெல்லாம் பெயர் வைத்தனர். தந்தையிடம் இருந்த மொழிப்பற்று பிள்ளைகளிடம் இல்லை.

ஒருவர் யார் என அடையாளம் காட்டுவது அவர் பெயரே. 'லிம் கிட் சியாங்' என்றால் அவர் ஒரு சீனர், 'பூத்தே பின் அப்துல்லா' என்றால் அவர் ஒரு மலாய்க்காரர், 'பீட்டர் ஜோன்சன்' என்றால் அவர் ஒரு ஆங்கிலேயர், 'மாணிக்கம்' என்றால் அவர் ஒரு தமிழர்.

இப்படி ஒருவர் தாங்கியுள்ள பெயரானது அவர் யார்? எம் மொழிக்குரியவர் என்பதை அடையாளம் காட்டும். ஒருவர் பெயர் வினிஸ்டன் என்றிருக்கிறது. இவர் யார்? யாருக்கும் தெரியாது. ஆனால் உண்மையில் அவர் ஒரு பச்சைத் தமிழர். அருந்தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்.

அவர் பெற்றோர் 'புதுமை' 'இனிமை' என்று எண்ணி, அவர்களாகவே சொந்தமாக உருவாக்கிய 'வினிஸ்டன்' என்ற ஒரு பெயரைத் தனது அருமை செல்வத்திற்கு சூட்டப் போய் அவர்கள் மகன் தமிழன் என்று என்னும் அடையாளத்தை இழந்து நிற்கிறார்.

தமிழை வாழவைக்க வேண்டிய; தமிழை உயிரென மதிக்க வேண்டிய; தமிழ்மொழியைக் கண்கள் என பாதுகாக்க வேண்டிய தமிழர்கள் பொருள்புரியாத, புதுப்புது பெயர்களை உருவாக்கிப் பிள்ளைகளுக்கு வைத்து வருவது தமிழ்மொழியை சிறுமைப்படுத்துவதற்கு ஒப்பாகும்.

குழந்தை பிறந்ததும் சோதிடரைத் தேடிப்போவது நடைமுறையில் உள்ளது. சோதிடர் பிறந்த நேரத்தை வைத்து பிள்ளைக்கு வைக்கும் பெயர் 'ர' வில் தொடங்க வேண்டும் 'டி' யில் தொடங்க வேண்டும் என்பார். எனவே தெய்வானை, தேவிகா, திவ்யா, தேவேந்திரன், தேவன், தினேஷ் என்று பிள்ளைகளுக்குப் பெயர் வைத்தனர்.

ஆனால் இன்றைய் பெற்றோரின் சிந்தனையில் ஒருமாற்றம் 'டி' யில் தானே பெயர் தொடங்கவேண்டும்? வைத்துவிட்டால் போச்சு என்று தெவினிஸ், தெனிவிகா, தினேஷின், தேவின் என்றெல்லாம் ஏற்கனவே வழங்கிய பெயர்களைப் புதுப்பித்துள்ளனர்.

இன்றைய தமிழ்ப் பெற்றோர் அகராதியில் இல்லாத, உலகில் வழங்கும் 2000 க்கும் மேற்பட்ட மொழிகளில், உருபெருக்கியைக் கொண்டு தேடினாலும் கண்டுபிடிக்க முடியாத பொருளற்றப் பெயர்களைத் தமிழ்க் குழந்தைகளுக்கு வைத்துக் கொண்டிருப்பதால் அவர்களின் பெயர்கள் பிறப்பாவணத்தில் இப்படி பதிவாகி கொண்டிருக்கின்றன.

அகஷதா த/பெ. லிங்கம்
யுகதிஸ்வர் த/பெ. சுப்பிரமணியம்
கமலசலன் த/பெ. சுந்தரம்
சமிஸ்மா த/பெ. ராமசாமி
சுவானிஷி த/பெ. கிருஷ்ணா
நெகிலா த/பெ. கணேசன்

இது 2006 ஆம் ஆண்டில் உள்ள நிலை, பிள்ளையின் பெயர் தமிழாக இல்லாவிட்டாலும் தந்தைபெயர் லிங்கம் என்று இருப்பதால் சுந்தரம், கிருஷ்ணன், ராமசாமி, என்றெல்லாம் இருப்பதால் சுவாஷினி த/பெ. கிருஷ்ணன் என்னும் பெயர் கொண்டுள்ள பிள்ளை தமிழ்ப்பிள்ளைதான் என்று அடையாளம் கண்டு கொள்ள முடியும்.

ஆனால் கி.பி. 2035 ஆம் ஆண்டுகளில் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழர்களின் பெயர்கள் அடியிற் கண்டவாறு தான் இருக்கும் என்பதில் யாருக்கும் ஐயம் வேண்டாம்.

அகஸ்தா த/பெ. அதர்ஷ்
சுவானிஷா த/பெ. யுவன்ரட்சன்
பிரிதோஷ் த/பெ. சுஜாத்தான்
கமலசலன் த/பெ. சுரதகீர்த்தி
லெவிஸ் த/பெ. வத்தி
சுவஸ்மா த/பெ. தேபதிஸ்பன்
கிவிஸ்தா த/பெ. அதிர்ஸ்டன்

என் குழந்தை அதற்கு எப்படிப்பட்ட பெயர் வைக்கவேண்டும் என்பது என் விருப்பம். அதில் தலையிட யாருக்கும் உரிமை இல்லை என்கிறார் நண்பர்.

மொழிப்பற்று இல்லாத ஓர் இனம் தமிழினம். சீனர்களைப் பார்க்கிறேன். அவர்கள் தங்கள் தாய்மொழியாம் சீன மொழி மீது கொண்டுள்ள அளவில்லாப் பற்றினைக் கண்டு வியந்து போகிறேன்.

தமிழர்களையும் சீனர்களையும் ஒப்பிட்டுப்பார்த்து நொந்து போகிறேன். தமிழர்களிடம் தமிழ்ப்பற்றை தமிழுணர்வை ஊட்டிட நடந்த பல்லாண்டுகளாக மேற்கொள்ளப்பட்டு வந்த முயற்சிகள் விழலுக்கு இறைத்த நீர்போலாயின.

இருப்பினும் இன்றைய கால கட்டத்தில் டத்தோ பண்டிதன் தொடங்கியுள்ள தமிழ்ப்பாதுகாப்பு இயக்கம், மலேசிய திராவிடர் கழகம், தமிழர் இளைஞர் மன்றம், தமிழை முன்வைத்து இயங்கும் ஏனைய அமைப்புகளும் சில ஆண்டுகளுக்கு முன்பு வீட்டில் தமிழில் பேசுவோம் என்று ஓர் இயக்கம் தொடங்கியது போல 'தமிழில் பெயரிடுவோம்' என்னும் பெயரில் ஓர் இயக்கத்தைத் தொடங்க வேண்டும். அதன்வழி தமிழர்கள் மனம் மாறி தங்கள் அருமைச் செல்வங்களுக்கு நல்ல தமிழில் பெயர் வைக்கும் நிலை உருவாகவும் தமிழன் தன்னுடைய அடையாளத்தை இழந்துவிடாமல் பாதுகாக்கவும் முடியும் என என்னுகிறேன்.

**- நாரண திருவிடச்செல்வன்,**
மலேசியா,

✠ மலேசிய நண்பன்

# குவைத் எழுத்தாளருக்கு வரவேற்பு

குவைத் நாட்டிலிருந்து சென்னைக்கு வருகை தந்த எழுத்தாளரும் சமூக தொண்டருமான என்.சி. மோகன்தாசுக்கு உலகத் தமிழர் மையம் ஏற்பாட்டில் வரவேற்பு விழா நடைபெற்றது.

முன்னாள் அமைச்சர் க. இராசாராம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் அவ்வை. நடராசன், பேராசிரியர் பெரியார்தாசன், மதுரா டிராவல்ஸ் தலைவர் கலைமாமணி வி.கே.டி. பாலன், இலக்கிவீதி இனியவன், பத்திரிகையாளர் கௌதம நீலாம்பரன் ஆகியோர் பாராட்டிப் பேசினர்.

குவைத் நாட்டில் எண்ணெய் நிறுவனத்தில் (Kuwait National Petroleum Company) பணியாற்றி வருகின்ற என்.சி. மோகன்தாசு பிரண்ட் லைனர்ஸ் என்னும் அமைப்பை நிறுவியதுடன் அதன் ஒருங்கிணைப்பாளராகவும் தொண்டாற்றி வருகிறார். இந்த அமைப்பின் மூலமாகப் பிரபலங்கள் பங்கேற்கும் நிகழ்ச்சிகள் நடத்தி, நிதி திரட்டி பல நற்காரியங்களுக்கு துணையாகவும் தூண்டு கோலாகவும் செயலாற்றி வருகிறார்.

தமிழகத்தில் உள்ள - இந்தியாவில் உள்ள பெரும்பாலான பிரபலங்கள் இவரது ஏற்பாட்டில் குவைத் நிகழ்ச்சிகளில் பங்கேற்றவர்களே! கார்கில் நிதி, குஜராத் பூகம்ப நிதி, சுனாமி நிதி, புற்றுநோய் மருத்துவ நிதி என்றெல்லாம் பல இலட்சம் ரூபாய்களை வழங்கிச் சிறப்பித்ததும் இந்த அமைப்புதான். தமிழகத்தில் உள்ள பாலம் முதலான பல அறக்கட்டளைகளுக்கும் இலட்சக் கணக்கில் உதவி செய்ததும் இவ்வமைப்பினரே. இதுவரை இவ்வாறு இவரின் முயற்சியால் நன்கொடையாக அளிக்கப்பட்ட தொகை ரூபாய் அறுபது இலட்சத்தைத் தாண்டும்.

மிகச்சிறந்த எழுத்தாளரான இவர் பிரண்ட் லைனர்ஸ் என்னும் தலைப்பில் 10 தொகுதிகளை வெளிக்கொண்டு வந்துள்ளார். நூற்றுக்கும் அதிகமான நாவல்கள், முந்நூறுக்கும் மேற்பட்ட சிறுகதைகள், அறுபது நூல்கள், பல நூற்றுக்கணக்கான கட்டுரைகள் நான்கு தொலைக்காட்சி நாடகங்கள் என நீள்கிறது அவரின் படைப்பிலக்கியபணி. வி.ஐ.பிகளிடம்கண்டதும் கேட்டதும், தன்னம்பிக்கை தமிழர்கள் ஆகிய இவரது நூல்கள் அண்மைக்கால வரவுகள்.

## நிழற் பாராளுமன்றம்

- ஒற்றையடிப் பாதையிலும்
ஒரு சேர வருபவை.
ஒளியிலும் , வெயிலிலும் என்றும்
ஒளியாது வரும் நிழல்
அனுமதியின்றித் துணை வரும்
அழகு, அவலட்சணம் பார்க்காது.
அழையாது வரும் நிழல்,
- அழித்திட முடியாத நிழல்.
தன் நிழலே தனக்குத்
தரும் திகில், கிலி,
திருடன் துட்டனுக்கு துணையானது.
மரத்தின் மனமினிய பச்சையமும்
இரவின் கறுப்பையத்தால் நிழலாடும்
வரம் நிழற் பாராளுமன்றம்.
நிழலையும் அடியளந்து கணக்கிட்டு
- நேரம் கணித்தார் ஆதியில்.
கொழுத்தும் வெயிலில் நிழற்
கொடை எமக்குக் குடை.
கடையிட ஏழைக்குப் பரந்த
நடை,குளிரூட்டிக் காற்றுச் செலவற்றது.
ஓடிப் பிடித்து விளையாட
ஒரு தோழன் குழந்தைக்கு.
நிழலுக்கொரே நிறம் கறுப்பு.
நிழலின் அருமை வெயிலில் தெரியும்.

- வேதா இலங்காதிலகம், டென்மார்க்.

## எங்களுக்கு இல்லை தீபாவளி

- நாங்களோ ஏழைகள்
நாங்கள் வறுமையெனும்
இருட்டினிலோ வாடியே
நிற்கிறோம் !
எங்களுக்கு இல்லை
இந்தத் தீபாவளி !
- எங்கள் வாழ்க்கையும்
துயரமெனும் இருளும்
தலைச் சுற்றுகிற
இரு சக்கரங்கள் தானே !
துரைச் சக்கர வெளிச்சமே
எங்களுக்கு இருட்டுத்தானே !
- எங்கள் வாழ்க்கையே
கசப்பாகி நிற்கும் போது
இனிப்புப் பலகாரங்கள்
எப்படி இனிக்கும் ?
- கிழிந்த ஆடைகளே
எங்களின் மூலதனம் !
பிழிந்துத் துவைத்த
அவ்வாடைகளே எமக்குப் புத்தாடை !
- என்று எங்கள் வறுமை
இருள் நீங்குகிறதோ
அன்றுதான் எங்களுக்கு
உண்மைத் தீபாவளி !

அன்பளிப்பு, நன்கொடை, வளர்ச்சி நிதி அனுப்பலாமே !

- சு. இலக்குமணசுவாமி, மதுரை -6.

# "பர்மாத் தமிழர்களின் பிள்ளைகள் தமிழ்ப் படிக்க தமிழாசிரியர்களையும், புத்தகங்களையும் அனுப்பி வையுங்கள்"

## ✣ பர்மா அறநெறிக் கழகத் தலைவர் வேண்டுகோள்

பர்மாவில் (மியன்மார்) கடந்த 25 ஆண்டுகளாக அறநெறிக் கழகம் என்ற அமைப்பை உருவாக்கி, தமிழ்மொழி பாதுகாப்பு, தமிழ் விழாக்கள், தமிழ்க் கூட்டங்கள் நடத்திவரும் இரங்கூன் அறநெறிக் கழகத் தலைவர் கோ. கலைச்செல்வனுக்கு (74) சென்னையில் தமிழ்ச் சுரங்கம், பன்னாட்டு தமிழுறவு மன்றத்தின் சார்பில் சிறப்பான வரவேற்பு கொடுக்கப்பட்டது.

தமிழ்ச்சுரங்கத் தலைவர் ஆறு. அழகப்பன் தலைமை வகிக்க கலைமாமணி எஸ். எம். உமர் முன்னிலை வகித்தார். கலைச்செல்வனை இலக்கிய பீட ஆசிரியர் விக்ரம், மூவேந்தர் முரசு ஆசிரியர் மூவேந்தர்முத்து, கவிஞர் இரவி பாரதி, புலவர் அறிவுடைநம்பி முதலியோர் வாழ்த்தினர்.

தமிழ்ச்சுரங்கத்தின் சார்பாக நிறுவனர் ஆறு. அழகப்பன் கலைச்செல்வனுக்கு தமிழ் மாமணி பட்டமும் விருதும் வழங்கினார். தமிழ் எழுத்தாளர்களால் தாங்கள் எழுதிய நூல்களையும் பர்மீயத் தமிழ் நூலகத்திற்கு அன்பளிப்பாக அளித்தனர்.

பர்மாவில் 10 இலட்சம் தமிழர்கள் வாழ்ந்தாலும் நல்லகாலம் என்ற ஒரேயொரு பத்திரிகை தான் நடக்கிறது. இந்த மனக் குறையைப் போக்க பாராட்டுக் குழுவின் சார்பாக தமிழகத்தில் நடந்து கொண்டிருக்கும் ஐம்பது இதழ்களில் இருந்தும் ஒவ்வொரு பிரதி அன்பளிப்பாக கலைமாமணி விக்ரமன் அளித்தார்.

ஏற்புரை நிகழ்த்திய கோ. கலைச்செல்வன் '10 இலட்சம் தமிழர்கள் வாழும் நாட்டில் நாங்கள் மொழி, பண்பாடு, இன உணர்வு, முதலிய அடிப்படைப் பண்புகளை இழந்துவிடாமல் வாழ்கிறோம். பொருளாதரத்தில் சீனர்களுடனும், ஆட்சி செய்யும் பர்மீயர்களுடனும் சமமாக வாழ முடியாவிட்டாலும் தங்கள் வாழ்வு வறுமைக் கோட்டிற்கு கீழே சென்று விடவில்லை. தமிழர்கள் நவதானியம், மரவியாபாரம், நவரத்தினம், தங்கம், இரும்பு, உபரிப்பொருட்கள் முதலிய வணிகங்களில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

எங்களுக்கு தமிழ்ப் பள்ளிக்கூடம் என்று ஒன்று எங்கும் இல்லாததால் மாலையில் கோயில்களில் அந்தந்தப் பகுதிகளில் 50, 100 என்ற எண்ணிக்கையில் குழந்தைகளுக்கு தமிழ்ப்பாடம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். நாங்கள் உங்களிடம் எதிர்பார்ப்பது பள்ளி குழந்தைகளுக்கு தமிழ்ப் பாடப் புத்தகங்கள், மூன்று அல்லது ஆறு மாதங்களுக்கு இரண்டு தமிழாசிரியர்கள் அனுப்பி உதவிடுங்கள். பர்மாவிற்கு யார் வந்தாலும் விமான நிலையத்தில் நின்று வரவேற்கக் காத்திருப்பேன் என்று கூறினார்.

இருமுறை பர்மாத் தமிழர்கள் நலன் கருதி சென்று வந்த முனைவர் ஆறு. அழகப்பன். பர்மா பயணம் எளிது செலவு குறைந்தது என்று கூறி கல்கத்தா வரை இரயிலில் செல்லவேண்டும். பிறகு விமானத்திற்கு உரிய போக்குவரத்து கட்டணம் ரூபாய் 12,000 சுற்றுலா பயணிகளுக்கு ஒரு மாதத்திற்கு தொழில் பயணிகளுக்கு மூன்று மாதத்திற்கும் அனுமதி தருகிறார்கள். பயண நேரம் 1 3/4 மணி நேரம். பர்மாவின் இன்றைய நகர் அழகு, சிங்கார சிங்கப்பூரை விட வியப்பாக உள்ளது என்றும் கூறினார்.

விழாவில் அரு. கோபாலன், இளம்பாரி, பாவலர் இராமசந்திரன் கஸ்தூரி ராஜா, யு.எஸ்.எஸ். நடராசன், அமுதா பாலகிருஷ்ணன், இரவிபாண்டியன், பர்மீய சங்கத் தலைவர் ரெங்கசாமி, இராஜ்கணேசன், இலெ. பிரபாகரன், சட்டக்கதிர் ஆசிரியர் சம்பத், டாக்டர்.அன்பழகன் முதலிய எண்ணற்ற தமிழறிஞர்கள் வந்திருந்தனர்.

தமிழ்ப்பணி ஆசிரியர் வா.மு. சேதுராமன் தொகுத்து வழங்கினார். தமிழ் தேசிய பாதுகாப்பு இயக்கச் செயலர் பத்மநாபன் நன்றி கூறினார்.

### கைபேசியில் அழைத்தவர்கள் :

● முகில் பிரேம்குமார் - மதுரை ● எம். வேல்முருகன் - மதுரை ● ச. கிருஷ்ணமூர்த்தி - புதுக்கோட்டை ● கே. ஆர். அண்ணாமலை - புதுக்கோட்டை ● இரா. இரவி - மதுரை ● மது. ஜெயபால் - வேலூர் ● இலக்குவனார் திருவள்ளுவன் - சென்னை ● வலம்புரி லேனா - திருவாலம்பொழில் ● ஆர். சத்தியன் - திருவாரூர் ● க. இராசாமணி - செய்யாறு ● கவிஞர் விக்டர் - ஊட்டி ● டி.என். இமாஜான் - சிங்கப்பூர் ● இராஜேசுவரன் - புதுக்கோட்டை ● கி. இராஜா - புதுக்கோட்டை ● எடப்பாடி அழகேசன் - சேலம் ● நல்லையா சண்முகப்பிரபு - நோர்வே ● கவிஞர் தமிழவன் - கிருட்டிணகிரி ● அருட்கவி - அருப்புக்கோட்டை ● எம். கருண் - மும்பை ● கவிஞர் பொன்னண்ணா - டென்மார்க் ● திருமதி முகமதியாபேகம் - நாகூர் ● கன்னிக்கோவில் இராஜா - சென்னை ● தி. பாக்கியநாதன் - புதுக்கோட்டை ● ர. கணேஷ்குமார் - வேளச்சேரி ● நாமக்கல் பாலு - நாமக்கல் ● மருத்துவர் காசி பிச்சை - திருமானூர் ● சு. இலக்குமணசுவாமி - மதுரை ● நல. ஞானபண்டிதன் - திருப்பத்தூர் ● பி. பழனிச்சாமி - புதுக்கோட்டை ● புலவர் வ.பொ. வரதராசன் - ஈரோடு ● ஜெ. ஜெயராமன் - கும்பகோணம் ● வசீகரன் - சென்னை ● சந்திரசேகரன் - திருச்சி ● ஆறுமுகம் - திருநெல்வேலி ● காசிநாதன் - ஆவடி ● சண்முகச் செல்வன் - திருமானூர் ● வழக்கறிஞர் இராசேந்திரன் - கரூர் ● தமிழ்ச்செல்வன் - புதுச்சேரி மற்றும் பலர்.

## சிக்குன் குனியா

சிக்குன் குனியா நோய்க்கு மருந்தாகும் வேப்பிலை. 42 ஆண்டுகட்கு முன்பாகவே இந்நோய் பலரையும் பாதித்து உள்ளது. தினமணி நாளிதழ் 27-09-1964 இல் இந்நோய் பற்றி குறிப்பு வந்துள்ளது. வைரசால் ஏற்படும் அம்மை நோய்க்கு வேப்பிலையும் மஞ்சளையும் அரைத்து தடவி விடலாம்.

காய்ச்சல், விடாத மூட்டுவலி ஆகியன இந்நோயின் அறிகுறியாகும். இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் வேப்பிலை 10, முற்றிய வேப்பிலை 10, கீழா நெல்லி இலை 20 சேர்த்து அரைத்து தினசரி காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டு வெண்ணீர் குடிக்கவும்.

இதுபோல் காலை, மாலை வெறும் வயிற்றில் 5 நாட்கள் 10 வேளைகள் சாப்பிடலாம். வலி உள்ள மூட்டில் வேப்பிலை 20, மஞ்சள் 5 கிராம் சேர்த்து அரைத்து தடவி வரவும். இந்நோய் குணமாகும்.

**- மரு. கோ. மணிவாசகம்,**
**தேவூர், நாகை.**

## நகைச்சுவை மன்றக் கூட்டம்

### கோடை பண்பலை நிகழ்ச்சி நடத்துனர் சுந்தர ஆவுடையப்பன் பேச்சு.

திருச்சி நகைச்சுவை மன்றத்தில் கூட்டம் நடந்தது.

கூட்டத்திற்கு நகைச்சுவை மன்ற தலைவர் சுப்பிரமணியம் தலைமை தாங்கினார்.

'மகிழ்ச்சியே வாழ்க்கை' என்ற தலைப்பில் கொடைக்கானல் வானொலியின் கோடை பண்பலை நிகழ்ச்சிப் பொறுப்பாளர் சுந்தர ஆவுடையப்பன் நகைச்சுவை சொற்பொழிவு ஆற்றினார்.

தீரிக்ஷா துணுக்கு எழுத்தாளர், தஞ்சை தாமு ஆகியோர் வாழ்த்தி பேசினார்.

முன்னதாக சங்கர் வரவேற்றார்.

நகைச்சுவை மன்ற செயலாளர் சிவ குருநாதன் நன்றி கூறினார்.

## பரிசு பெற்ற அய்க்கூ

**1** சத்துணவில் மட்டுமல்ல
பரீட்சையிலும்
முட்டை !

- எஸ். எஸ். மணி,
திருவனந்தபுரம், கேரளா.

**2** சத்துணவில் முட்டை
கொழுக்கின்றனர்
ஊழியர்கள் !

- பட்டுக்கோட்டை **சீனிவாசன்**,
செய்யாறு, திருவண்ணாமலை.

**3** வயிற்றுக்குள் சலசலப்பு
புழுவுடன் வெளியேறியது
அழுகிய சத்துணவு முட்டை !

- முருக. வெள்ளியங்கிரி,
பவானிசாகர், ஈரோடு.

**பங்கேற்ற அனைவருக்கும் நல்வாழ்த்துக்கள்.**
**விரைவில் பரிசுத்தொகை அனுப்பப்படும்.**

## ஏழைதாசன் அய்க்கூப் போட்டி

### தலைப்பு : தேர்தல்

- ஒருவர் எத்தனைக் கவிதைகள் வேண்டுமானாலும் அனுபலாம்.
- அய்க்கூ மூன்று வரி உடையதாக இருக்க வேண்டும்.
- இப்போட்டி தொடர்ந்து நடத்தப்படும். இனி திங்கள் தோறும் போட்டி அறிவிக்கப்படும்.
- 1,2,3, என பரிசுக்குரிய கவிதை தேர்வு செய்து வெளியிடப்படும். பரிசு முறையே ரூ. 30/- ரூ. 20/- ரூ. 10/-
- ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.
- கடைசி நாள் : 30-11-2006.
- படைப்புகள் அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர், ஏழைதாசன் மாத இதழ்,
26, அடப்பன்வயல் 8 ஆம் வீதி,
புதுக்கோட்டை – 622 002.

# தமிழ்ப் பெண்

மும்பையில் செயல்பட்டு வரும் முன்னோடி தமிழ் அமைப்பு இந்தியப் பேனா நண்பர் பேரவை. இதன் நிறுவனர், மனிதநேய மாமணி எம். கருண், இவரது மனைவி திருமதி. சுலபா கருண் ஆவார்.

இவர் தமிழ் நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தைச்சேர்ந்தவர். மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு கல்வி கற்பிப்பதிலும், நடைமுறை வாழ்க்கைப் பழக்க வழக்கங்களை பற்றி தெளிவூட்டுவதிலும் சிறப்பு பெற்று விளங்குகிறார்.



பட்டதாரியான இவர் ஊனமுற்றோருக்கான கல்வியில் பட்டயமும் பெற்று உள்ளார். குறிப்பாக மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான துறையில் தனிப் பயிற்சி பெற்றுள்ள திருமதி. சுலபா கருண் செம்பூரில் உள்ள மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான ஒரு கல்வி நிறுவனத்தில் தொழில் பயிற்சி பொறுப்பாளராக பணியாற்றுகிறார்.

இத்துறையில் 25 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றும் இவரிடம் பயிற்சி பெற்ற மாணவர்களில் பலர் தன்னம்பிக்கையோடு தொழில் நிறுவனங்களில் பணியாற்றுகிறார்கள்.

1993-94ம் ஆண்டு இங்கிலாந்து ஹெர்போட்சயர் பல்கலைக் கழகம் மற்றும் இலண்டன் பெண்கள் குழுமம் இணைந்து வழங்கிய சுமார் 9 இலட்சம் ரூபாய் கல்விச் செலவு பெற்று ஊனமுற்றோருக்கான சிறப்புக் கல்வியில் பட்டப்படிப்பை இலண்டனில் முடித்தார். அவ்வாண்டு இந்தியாவில் இருந்து அக் கல்விக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே மாணவி என்ற பெருமை இவருக்கு இருந்தது.

இவ்வாண்டு (2006-07) இதே துறையில் முதுகலைப் பட்டப் படிப்பிற்கு (MA Erasmus Mundus Special Education Needs) இங்கிலாந்து ரோஹெம்டன் பல்கலைக் கழகம் சுமார் 21 லட்சம் ரூபாய் கல்விச் செலவு இவருக்கு அளிக்க முன்வந்துள்ளது. ஊனமுற்றோருக்கான முதுகலைப் பட்டம் அளிக்கும் இப்படிப்புக்கான வகுப்புகள் இங்கிலாந்து, நெதர்லாந்து, செக்கோஸ்லோவேக்கியா ஆகிய நாடுகளின் பல்கலைக் கழகங்களில் நடைபெறும்.

முதுகலைப் பட்டப் படிப்பினை துவங்க ஆகஸ்டு 29 ஆம் தேதி காலை இலண்டன் பயணமானார்.

# மும்பையில் சாதனை

## எழுத்தாளர்களுக்கு பல்வேறு சலுகைகள் வழங்கி உள்ள தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவித்து மதுரை அகில இந்திய எழுத்தாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஆரைகுடி மாயகிருஷ்ணன் வெளியிட்டுள்ள அறிக்கை



தமிழக சட்டப் பேரவையில் தமிழ் வளர்ச்சி பண்பாடு துறைக்கான மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதில் அளித்த மாண்புமிகு நிதி அமைச்சர் பேராசிரியர். க. அன்பழகன் எழுத்தாளர் நலன் காக்கும் மருத்துவக் காப்பீடு திட்டம் என்ற புதிய திட்டம் தொடங்கப்பட்டு, இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் 100 படைப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 1 இலட்சம் வரை மருத்துவ உதவி பெறும் வகையில் காப்பீடு செய்து அதற்கு ஆண்டு தோறும் செலுத்த வேண்டிய தவணைத் தொகையை அரசே செலுத்தும் என்றும் அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்பட்டுவரும் ரூ. 500/– நிதி உதவி 1000/– ரூபாயாக உயர்த்தி இந்த ஆண்டிலிருந்து வழங்கப்படும் என்றும் எந்த ஒரு மாநில முதலமைச்சர்களும் இதுவரை அறிவிக்காத பல அறிவிப்புகளை வறிய நிலையில் உள்ள எழுத்தாளர்களும் பயன்பெறும் வகையில் அறிவித்துள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர். கலைஞர் அவர்களுக்கு அகில இந்திய எழுத்தாளர் சங்கத்தின் சார்பில் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

எழுத்தாளர்கள் மீதும், பத்திரிக்கைத் துறையினர் மீதும் மிகுந்த பற்றும் பாசமும் வைத்துள்ள முதல்வர் அவர்கள் 'ப்ரீலான்ஸ் ரிப்போர்ட்டர்களை' (சுயேட்சை நிருபர்கள்) ஊக்குவிக்கும் வகையில் சலுகைகள் அறிவிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

புதிதாக இதழ் பெறுபவர்கள் ஆண்டுக் கட்டணம் ரூ. 60/– அனுப்புங்களேன்!

# முன்னாள் அமைச்சரின் மடல்

நெஞ்சிற்கினிய கவிதைச் செம்மல் ஏழைதாசன் இதழாசிரியர் இளவல் எஸ். விஜயகுமார் அவர்களுக்கு,

வணக்கம். தங்கள் நலம் ஓங்குக.

அகில உலகத் தமிழர்களுக்கெல்லாம் அரிய பாலமாக மாறி, வையகத் தமிழர்களின் செய்திகளையும், குரலையும் எங்கள் வாசல்களில் கொண்டு வந்து சேர்க்கும் தங்களை நெஞ்சாரப் பாராட்டிப் போற்றுகின்றேன்.

செப்டம்பர் இதழில் ஈழத் தமிழ் உள்ளங்களின் ஏக்கப் பெருமூச்சுகளை அப்படியே எதிரொலித்த முதல் கட்டுரை நெஞ்சை உறைய வைத்தது. தங்களின் பொறுப்புணர்வு கண்டு நெகிழ்வுடன் பாராட்டுகின்றேன்.

இந்த எளியவனைப் பற்றிய எந்த செய்தியாக இருந்தாலும் தேடிப் பிடித்து, முக்கியத்துவம் அளித்து தகவல் வெளியிடும் தாங்கள், என் ஐரோப்பியப் பயண நிறைவுச் செய்தியை, நிழற்படத்துடன் விரிவாக வெளியிட்டு மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதக்க விட்டதை உளமார மெய்சிலிர்ப்புடன் போற்றி நன்றிகூறுகின்றேன்.

தங்கள் இதழ் பக்கங்களில் குறைவாக இருக்கலாம். ஆனால் படைக்கும் கருத்து விருந்தில் நெஞ்சை அள்ளுகிறது. மகிழம்பூ தோற்றத்தில் சிறியது தான்; ஆனால் மணத்தை வாரி வழங்குவதில் மேலோங்கி நிற்பதில்லையா?

வாழிய தங்கள் ஒப்பரிய இதழ்த் தொண்டு!

ஓட்டும் தங்கள் எழுதுகோல்!

கவிவேந்தர். **கா. வேழவேந்தன்**, பி.ஏ.,பி.எல்.,
முன்னாள் அமைச்சர், சென்னை - 4.




## இரண்டு தடவை இலங்கை ஜனாதிபதி விருதுபெற்றவர் பேசுகிறார்.

நான் இலங்கை மானாமக்கீன் பேசுகிறேன்.

காலை வணக்கம். எனது கொழும்பு முகவரிக்கு உங்களது ஏழைதாசன் தொடர்ந்து கிடைத்து வருகிறது. இதழும் மிக நன்றாக இருக்கிறது.

முகம் பத்திரிகை உங்களது தமிழ்ப் பணியைப் பாராட்டுகிறது. நானும் உங்களைப் மனமாரப் பாராட்டுகிறேன். முகம் கொள்கை நழுவியதை விமர்சித்து நீங்கள் வெகு துணிச்சலாக எழுதியதை நானும் படித்தேன். அவர்களே உங்களை சென்னைக்கு அழைத்துப் பாராட்டுவது மிகச் சிறப்பு வாய்ந்தது.

இலண்டன் தமிழினி குலேந்திரன் அவர்கள் பலருக்கும் உதவும் பெருந்தகையாளர். அவர் உங்களுக்கு ஏதும் செய்தாரா ? அடுத்த மாதம்அவர் சென்னை வருகிறார்போலும் ஒரு பெரிய நிகழ்வில் கலந்து கொள்ள இருக்கிறார்.

இது குறித்து விரிவான செய்திக்கு இரவி தமிழ்வாணன் அவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். தொடர்ச்சியாக தமிழக மண்ணில் இருந்து செயல்பட்டு உலகின் பலரையும் உங்கள் பக்கம் வளைத்துப் போட்டிக்கிறீர்கள் பாராட்டுக்கள்.

எனது நூலுக்கு நீங்கள் எழுதியிருந்த புத்தக மதிப்புரை படித்து மகிழ்ந்தேன். இரண்டு நூலுக்கும் ஒரே இதழில் அருமையாக இருந்தது. குறிப்பாக பாரதி நூலுக்கு நீங்கள் வழங்கிய மதிப்புரை உண்மையானது, உயர்வானது. ஏழைதாசன் தொடர்ந்து வர உங்கள் முயற்சி வெற்றிபெற எந்நாளும் பக்க பலமாய் இருப்பேன். நன்றி, வணக்ம்.

(09-09-2006 காலை 7 மணிக்கு கைபேசியில் உறவாடியதின் சுருக்கம்)

# புலம்பெயர் வாழ்க்கை

❋ ஓய்வறையில் கண்ணீர்
ஓடுதளத்தில் கையசைப்பு
பொருள்வயின் பிரிவு.

❋ திரும்பும் போதெல்லாம்
ததும்பும் சோகம்
சொந்த ஊர் திசை.

❋ ஊருக்குப் போகும் கடிதங்கள்
அஞ்சல் முத்திரைகளுடன்
முத்தச் சுவடுகள்.

❋ அந்நிய தேசத்துக் குழந்தைகள்
முகங்களில் தேடும்
பிள்ளையின் சாயல்.

❋ தொலைபேசியில்
பிறந்த நாள் வாழ்த்து
விழிகளில் அரும்புகள்.

❋ பொறாமைப் பார்வை
பொசுக்கி எடுக்கும்
கடற்பறவை.

❋ வேர் பிடிக்காத
விசித்திர பதியன்
புலம்பெயர் வாழ்க்கை.

- **வெற்றிப் பேரொளி**, திருக்குவளை.

ஆண்டுக் கட்டணம் ரூ. 60/-
பணவிடை (M.O.) அனுப்பி விட்டீர்களா !

## "தமிழ் உணர்வை மெச்சுகிறேன்"

வணக்கம். நான் இலண்டனில் இருந்து 'விடலி' பத்திரிகை ஆசிரியர் அமுதவன் பேசுகிறேன். சுகமாய் இருக்கிறீர்களா ? உங்கள் பத்திரிகைத் தொடர்ந்து எனக்குக் கிடைக்கிறது.

ஒரு சின்னப் பத்திரிலகயை எத்தனை பொறுப்போடும், கவனத்தோடும் நடத்துகிறீர்கள். பார்க்கவும், படிக்கவும் ரொம்ப சந்தோசம் ஏற்படுகிறது; திருப்தி கிடைக்கிறது.

உலகம் தழுவிய ஒரு வட்டத்தை உண்டு பண்ணி இருக்கிறீர்களே ! என்னுடைய முகவரி உங்களுக்கு எப்படி கிடைத்ததோ ? ஆனால் உங்களது இதழை வாசிக்கும் வாய்ப்பு எனக்கு கிடைக்கிறது. அதற்கெனவும் உங்களுக்கு தனி நன்றி.

புலம்பெயர்ந்த எமது சொந்தங்கள் படைப்புகளை ஆக்கங்களை வாசிக்க, வாசிக்க மகிழ்ச்சி, அவர்களுடன் உறவாடிய மனநெகிழ்ச்சி.

'புதிய சொற்கள்' என நீங்கள் வெளியிடும் பட்டியல் மிகவும் பயன்தரக் கூடியது. அதைத் தொடர்ந்து பெரிய அளவில் வெளியிட்டு வாருங்கள், உங்களது தமிழ்ப்பற்று கண்டு உண்மையிலேயே வியப்பாகவும், மலைப்பாகவும் இருக்கிறது எனக்கு.

திங்கள் தோறும் திகதி தவறாமல் பெருத்த பொருட் செலவில், பணநெருக்கடியில் கொண்ட கொள்கைக்காகவும் குறிக்கோளுக்காகவும் அயராமல் பாடுபட்டுக் கொண்டிருக்கிறீர்கள்.

தமிழ்நாட்டுச் சூழல் மிகவும் கஷ்டமானது என்பதை நான் அறிவேன். சில சஞ்சிகைகள் இரண்டு மாதம் வரும் பின்பு நின்று விடும், நீங்கள் தொடர்ச்சியாக நான்கு மாதமாக அனுப்பி வருகிறீர்கள்.

உங்களது அப்பட்டமான தமிழ் உணர்வை மெச்சியே ஆக வேண்டும். இங்கிருந்து ஏதாவது செய்ய இயலுமா ? என்று முயற்சிக்கின்றேன் அல்லது சென்னையில் உள்ள உறவினர்கள் மூலம் இதழ் வளர்ச்சிக்கு உதவ எண்ணிதான் உங்களோடு தொடர்புற்றேன்.

உங்கள் இதழ்ப் பெயர் ஏழைதாசன், இப்படிபெயர் வைக்கவும் ஒரு துணிச்சல் வேண்டும். வெகு அருமையான இந்தத் தமிழ்ப் பத்திரிகையை தொடர்ந்து நடத்துங்கள். தமிழன்னை ஆசீர்வதிப்பாராக. சமயம் கிடைக்கும்போது மீண்டும் அழைக்கிறேன். நமது நட்பு தொடர்ந்து உறுதியாக செயல்படுவோம். நன்றி ! வணக்கம்.

(26-08-2006 அன்று மதியம் 3:31 மணிக்கு கைபேசியில் தொடர்ந்த அழைப்பின் சுருக்கம்)

## கைபேசித் துளிகள்

ஆசிரியரின் கைபேசி 94 42 77 68 68

இலக்கத்திற்கு வரப்பெற்றவை

அமைதியாய்
கொண்டாடி மகிழ்ந்தனர்
பட்டாசுப் பேரொலி !

- வசீகரன், சென்னை.

நண்பன் தொலைக்காட்சிநிகழ்ச்சி
மனதிற்குள் மழை
மின் தடை !

- நிலா கிருஷ்ணமூர்த்தி, கோவை.

வானம் பார்க்கிறேன்
அடுப்படி ஞாபகம்
மண்ணுக்கு பசி இல்லை !

- கலகராஜ், திண்டுக்கல்.

படிக்க, படிக்க ஆத்திரம்
திருடி விட்டீர்களா
குங்குமம் !

- ஆறுமுகம், நெல்லை.

மக்களையும் தொற்றியது
அரசியல் வியாதி
கட் — அவுட் கலாச்சாரம் !

- இரா.இரவி, மதுரை.

இரவு நேர மழையில் வழியும்
நீர்டுக்குகளிடையே
கத்துகிற தவளைகள் !

- வதிலை பிரபா, திண்டுக்கல்.

பண்பலை வருகை
நல்ல முன்னேற்றம்
தொலைபேசி துறைக்கு !

- எம்.வேல்முருகன், மதுரை.

மின்சாரம் அறுந்த இரவில்
ஊடுருவும் கைகள்
வெளிச்சம் தேடி !


- பவ. கணேஷ், சென்னை.

ஒருத்தியின்
மானம் காக்க
மடிந்தன பட்டுப்புழுக்கள் !

- குறிஞ்சி மலரோன், நீலகிரி.

ஊமை வெடி
தேடி அலையும் சிறுவன்
சிவகாசி !

- மா. ஞானசேகரன், புதுவை-9



# பிணம் தூக்கும் பணியாளரைக் கொண்டு நூல் வெளியீட்டு விழா

சுற்றுச் சூழல் விழிப்புணர்வு கருத்துக்களை முன்னிறுத்தி, புதுச்சேரி – தமிழகத்தைச் சேர்ந்த 78 கவிஞர்கள் பங்குபெற்ற கவிதைத் தொகுப்பான '**கீ.பி. 2400 ஒரு ஞாயிற்றுக்கிழமை**' என்கிற நூலை, புதுவை நகராட்சியின் பிணம் தூக்கும் பணியாளரான **கிருட்டிணவேணி** வெளியிட, செம்படுகை நன்னீரகம் **இராமமூர்த்தி, சபா. குப்புசாமி, அமுதன், பானுமதி** ஆகியோர் பெற்றுக் கொண்டனர். **புதுவை சீனு, தமிழ்மணி** இந்நூலுக்கு மதிப்புரை வழங்கினார். **செந்தமிழினியன், தமிழ்நெஞ்சன்** ஏற்புரைக்குப்பின் **இளையகுமரன்** நன்றி கூறினார். திருச்சி, சென்னை, செஞ்சி, திருவண்ணாமலை, விழுப்புரம் பகுதிகளில் இருந்து கவிஞர்கள் பலரும் கலந்துகொண்டு விழாவினைச் சிறப்பித்தனர்.

## உண்மை போலத் தோன்றும் பொய்கள் !

- உங்களுக்கு என்னுடைய கடிதம் வந்து கொண்டிருக்கிறது.
- நீங்கள் இதைக் கொடுத்தால், அடுத்தது நான் கொடுப்பேன்.
- உங்களால்தான் அந்த வேலையை விடாமல் இருக்கிறேன்.
- பொய் பேச எனக்கு வாயே வராது.
- எதைப் பற்றியும் யாரைப் பற்றியும் எனக்கு கவலையே இல்லை.
- நான் எனக்காக எதையும் செய்யவில்லை.
- நீங்கள் சொன்னால் எல்லாம் சரி.
- உங்ளுக்கு நிகரானவர் யாராவது உண்டா ?
- நான் மட்டும் அந்த இடத்தில் இருந்திருந்தால் அப்படி நடந்திருக்காது.
- உங்களை நினைத்து நான் தூங்கவே இல்லை.
- உங்களைத்தான் உயிராக நினைக்கிறேன்.
- பணத்திற்காக நான் எதையும் செய்வதில்லை. என்னுடைய இலட்சியம் தான் முக்கியம்.
- தப்பு நடந்து விட்டதுதான். ஆனாலும் நல்ல நண்பர்களாகவே இருப்போம்.
- கவலைப் படாதீர்கள். எதுவும் போய்விடவில்லை. நான் எந்த இடத்தில் உள்ளேன் என்பது எனக்குத் தெளிவுதான்.
- உங்களை நான், போனில் பிறகு அழைக்கிறேன்.
- இதற்கு முன்னால் இப்படி, நான் செய்ததே இல்லை.
- நான் உங்களுக்கு உதவுவதற்காகத்தான் வந்துள்ளேன்.
- நான் உங்களைப் பற்றித்தான் நினைத்துக் கொண்டிருந்தேன்.

– சேர. சச்சிதானந்தன், நாமக்கல் –1.

உங்கள் தன்குறிப்பும் புகைப்படமும் முகப்பு அட்டையில் இடம்பெற தொடர்பு கொள்ளலாமே !

# சிங்கப்பூரில் தமிழ் வளர்க்கும் சீர்மிகு எழுத்தாளர் டி.என். இமாஜான் !





... சிங்கப்பூரில் வாழும் இனிய கவிஞர் டி.என். இமாஜான், சென்னை மணிமேகலைப் பிரசுரத்தின் வாயிலாக 40 நூல்களை எழுதி வெளியிட்டு உள்ளார். இந்நூல்களின் வெளியீட்டுவிழா 21-1-2006 அன்று சிங்கையில் நடந்துள்ளது. மொத்தமாக இவர் எழுதி வெளியான நூல்களின் எண்ணிக்கை 43 ஆகும். அனைத்து நூல்களுமே சிரிப்பினூடே பிறந்த சிந்தனை முத்துக்கள். எதையும் நகைச்சுவை உணர்வுடன் நயம்பட சொல்லுவதில் தமிழ்நாட்டுக் கலைவாணர் போல சிங்கை கலைவாணர் இவர். இத்தனை நூல்களை வெளியிட ஒரே காரணம் தமிழ். தமிழ் மீது தான் கொண்டுள்ள தீராப்பற்றுதல் ஒன்றே. ஒரு மிகப் பெரிய சிரிப்புத் திருவிழாவையே தன் நூல்கள் வழி நடத்திக்காட்டி உள்ள இவர், நல்ல சிந்தனை வளமிக்க கற்பனை ஆற்றல் பெற்றவரும் கூட. முத்தான மூன்று அய்க்கூ நூல்களை நமது பார்வைக்கு அனுப்பி உள்ளார். அவை யாவும் அரும்பெரும் முயற்சிகள் உடையன. எங்கோ ஒரு அந்நிய மண்ணில் வாழ்ந்து தமிழ் வளர்ப்பது அவ்வளவு எளிதான விசயமில்லை. இவரது நூல் பட்டியல் பார்க்கிற போது உண்மையாகவே தமிழ்த்தாயின் ஆசி பெற்ற எழுத்தாளர் என்பது நிரூபணமாகிறது.



'நகைச்சுவையான அய்க்கூ கவிதைகள்' நூலில் "மாமியார் திட்டினாள் / மருமகளும் திட்டினாள் / எதிர்வீட்டுக் காரியை" உலகெங்கிலும் உள்ள இப்பிரச்சனையை வெகுநேர்த்தியாக கையாண்டு இருக்கிறார். பெண்ணடிமைத் தத்துவத்தை அரைகுறையாக புரிந்துகொண்ட நவநாகரீக பெண்கள் என்ன செய்கிறார்கள் ? "புதுமைப் பெண் அவள் / புருசனைக் கூப்பிட்டாள் / வாடா, போடா" சோதிடப்புரட்டர்களை ஒருபிடி பிடிக்கிறார் "மகன் வாய் சொன்னான் / அப்பன் சந்தோசப்பட்டான் / வருங்கால ஜோதிடர்" இவ்வாறு இவரது கவிதைகள் சிரிப்போடு சிந்திக்க வைக்கின்றன.

'புன்னகை பூக்கும் கவிதை மின்னல்கள்' நூலில் பெண்களின் கண்களுக்கு வசீகரமும் பேசும் திறனும் இருப்பதை அழகாக சுட்டுகிறார். "ஊமையாய் இருந்தும் அவள் / அருமையாகப் பேசினாள் / அழகிய கண்கள்" அடுத்தொரு அற்புதமான படப்பிடிப்பு 'பூக்காத செடிகளிடையே / பல வண்ண பூ ஒன்று / வண்ணத்துப் பூச்சி" பொருத்தம் பார்ப்பவர்கள் இதையும் பார்க்கலாமே "வாயாடிப் பெண்ணுக்கு / பொருத்தமான மாப்பிள்ளை / கேட்கும் சக்தி குறைந்தவர்" முகச் சுருக்கத்தை எப்படி கவிதையாக்குகிறார் பாருங்கள் "முகத்தில் சுருக்கம் விழுந்ததில் / சந்தோசம் தான் நடிகைக்கு / அம்மா வேடத்துக்கு தயார்" பெற்றோரை ஒதுக்கும் பிள்ளைகளின் சீரழிவு கலாச்சாரத்திற்கு இதுஒரு அழுத்தப் பதிவு "காயலான் கடை பணக்காரன் / முதியோர் இல்லம் தேடினான் / பெற்றோரை விட்டுவிட"



'இனிமையில் நனைந்த கவிதை நறுக்குகள்' நூலில் "எரியூட்டும் வெட்டியான் / நடைபிணமாய் ஆனான் / மனைவி சாவு" ஒரு கடைநிலை மனிதனின் மனநிலையை நன்றாக சித்தரிக்கிறார். "ஒழுக்கமில்லாத பெரியவர் / அருமையாகப் பேசினார் / திருக்குறள் உரை" ஓரளவாவது ஒழுக்கமுடன் வாழ்பவர்களே திருக்குறளை தொட்டுப் பேச வேண்டும் என்பதில் எவருக்கேனும் மாற்றுக் கருத்து உண்டா ?

தமிழகத்தைச் சேர்ந்த நாகூரில் பிறந்து, இஸ்லாம் மதத்தில் வளர்ந்து, சிங்கையில் வாழ்ந்து தமிழ்ப் பணியாற்றும் சீர்மிகு எழுத்தாளர். டி.என். இமாஜான் ஜப்பானிய அய்க்கூக்களை கையாண்டிருக்கும் விதமே அலாதியானது. மூன்று வரி கவிதையில் இரண்டு வரி ஒரு கருத்தையும் கற்பனையும் தரும். மூன்றாவது வரியில் ஒரு திருப்பம், மாற்றம் அதிர்ச்சி, எள்ளல் தருவதே அய்க்கூ. இதை சரியாக மனதில் பதித்துக் கொண்டு சரளமாக எழுதியுள்ளார். அங்கங்கே சமூக அவலங்கள், பகுத்தறிவுச் சிந்தனைகள் பளிச்சிடுகின்றன. பாராட்டுக்கள் ! நல் வாழ்த்துக்கள்.

நூல்கள் வெளியீடு : மணிமேகலைப் பிரசுரம், 7, தணிகாசலம் சாலை, சென்னை – 17.

## தமிழ் வளர்ச்சித் திருவிழா



சிவகங்கை - திருப்புவனத்தில் வேலம்மாள் கல்வி அறக்கட்டளை தமிழ் வளர்ச்சித் திருவிழா கொண்டாடியது. மதுரை, திண்டுக்கல், விருதுநகர், இராமநாதபுரம், சிவகங்கை உள்ளிட்ட மாணவர்கள் பேச்சுப்போட்டியில் பங்கேற்றனர். பட்டிமன்ற பேச்சாளர். தா.கு. சுப்பிரமணியன் பரிசுகள் வழங்கினார் நல. ஞானபண்டிதன், செயங்கொண்டான் விழாவைச் சிறப்பித்தனர்.

## இலவச கல்வி மையம்



திருப்புவனம் புதூரில் வ.உ.சி. இலவச கல்வி மையம் தொடங்கப்பட்டது. அ. கோவிந்தன் தலைமையில் அ. சக்திமாரி வரவேற்றார். பி. சுப்பிரமணியம் வாழ்த்தினார். சிறப்பு விருந்தினாராக நல. ஞானபாண்டிதன் கலந்து கொண்டார். எம்.பி. பழனிவேல் நன்றி தெரிவித்தார்.

## சவால் - 2006

சிவகங்கை ஜுனியர் சேம்பர் நடத்திய இளைஞர்களின் கலைத் திருவிழா 21ஆம் நூற்றாண்டு சர்வதேச பள்ளியில் நடந்தது. எஸ்.கே.எஸ். குமார் தலைமை தாங்கினார். ஆர்.கண்ணன் வாழ்த்துரைத்தார். ஆர். சண்முகராஜன் தொகுப்பாளராக விளங்கினார். ஆர். ராஜகோவிந்தசாமி சிறப்புரையாற்றினார். கே.ஆர்.சேது பரிசுகள் வழங்கினார். நடுவர்களாக அணு என். முத்துகிருஷ்ணன், கவிஞர் மின்னல் பிரியன் நல.ஞானபண்டிதன், செயங்கொண்டான் பாற்கடல்பலராம்ஜி, செல்வி பா. அபி ஆகியோர் செயல்பட்டு விழாவிற்கு சிறப்பு சேர்த்தனர்.



## தைப்பூசத்தை முன்னிட்டு...

மூட்டுவலிக்கு இலவச மூலிகை தைல வர்ம தடவு பயிற்சி முகாம். நாள் : பிப்ரவரி 2007 முதல் வாரம்

இடம் : மாரியம்மாள் மகாலிங்கம் திருமண மண்டபம், மேட்டுக்குப்பம், வடலூர், கடலூர் மாவட்டம்.

ஆர்வம் உள்ளவர்கள் ஒரு நாள் பயிற்சியில் கலந்து கொள்ளலாம். உணவு, தங்குமிடம் இலவசம்.

ரிப்ளை கார்டில் முகவரி, வயது, தொழில் எழுதி பதிவு செய்து கொள்ளலாம். மரு.கோ. மணிவாசகன்,தேவூர் – 611 109, நாகை மாவட்டம்.

## பிறந்த நாள்

உணர்ச்சிக் கவிஞர் சிங்கார வேலன் பிறந்த நாள் 22-11-1934 ஆகும்.


72 அகவை நிறைவடைந்து 73 ஆவது அகவைத் தொடங்கும் இவர்,

பல்லாண்டு வாழ்ந்து, பைந்தமிழ் வளர்க்க வாழ்த்துக்கள்.

அட்டைப் படக் கட்டுரை :

# தமிழ்க் கவிதை போதனையாளர் !

# முதல் இணைய சாதனையாளர் !



மதுரை திருமலை நாயக்கர் அரண்மனை சுற்றுலாத் துறையில் பணிபுரிந்து வருபவர் கவிஞர் இரா. இரவி. இவர் தமிழ் அய்க்கூ கவிதைக்கான முதல் இணைய தளத்தை கவிமலர் டாட் காம் (www.kavimalar.com) என்ற பெயரில் துவக்கி உள்ளார்.

இவரது 6 கவிதை நூல்களும், ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட அய்க்கூ கவிதைகளும், இலக்கிய விழா புகைப்படங்களும் தெரியும் ஒப்பற்ற இணைய தளமாக திகழ்கின்றது.

இவ்விணையத்தின் இடது ஓரத்தில் (Cq Counter) வரிசை உள்ளது. அதில் இணையத்தைப் பார்த்தவர்கள் பற்றிய புள்ளி விபரம் உள்ளது. 90,000 பேருக்குமேல் பார்த்து உள்ளனர். பிற தமிழ் இணைய தளங்களின் 300 முகவரிகள் உள்ளன.

விருந்தினர் புத்தகத்தில் (Guest Book) கவிமலர் டாட் காம் இணைய தளத்தை கண்டு களித்தவர்கள் உடனடியாக தங்களின் கருத்துக்களை பதிவு செய்யலாம். அவர்களது இணையதளத்திற்கு இலவச இணைப்பு உள்ளது. நடிகர் சிவகுமார் மகன் நடிகர் சூர்யா விருந்தினர் புத்தகத்தில் பாராட்டி கருத்தினை பதிவு செய்து உள்ளார்.

அவரது இணைய தளத்திற்கு இலவச இணைப்பு உள்ளது. பிரபல தமிழ் இணையங்கள் அனைத்திலும் கவிமலர் டாட் காம் இணையதளத்திற்கு தந்து உள்ளனர். உலக அளவில் பல நாடுகளில் இருந்து தமிழர்கள் பார்த்துப் பாராட்டி உள்ளனர்.

அய்க்கூ கவிதைகள் மட்டுமின்றி கவியரங்க கவிதைகள், குடியரசுத் தலைவர் அப்துல் கலாமின் அக்கினி சிறகுகள் நூல் பற்றி விமர்சனக் கவிதை, கவியரசு கண்ணதாசன் பற்றியும் பல்வேறு கவிதைகள் உள்ளன.

இக்கவிஞரின் அய்க்கூ கவிதைகள் நூல் சிறந்த நூலாகத் தேர்வு செய்யப்பட்டு புதுவை துணைவேந்தரிடம் இருந்து ரூ. 1000/- பரிசும் பாராட்டு சான்றிதழும் பெற்றுள்ளார். இந்நூலில் உள்ள கவிதைகள் திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் பாடநூலிலும் இடம்பெற்று உள்ளன.

இலண்டன் சுடரொளி வெளியீட்டுக் கழகம் நடத்திய உலக அளவிலான கவிதைப் போட்டியில் 2 தடவை பரிசு பெற்று உள்ளார். 1992 இல்சிறந்த அரசுப் பணியாளருக்கான விருதும் பெற்று உள்ளார்.

விஞ்ஞானி நெல்லை சு. முத்து எழுதிய புத்தாயிரம் தமிழ் அய்க்கூ நூலில் 100க்கு மேலான இவரது அய்க்கூக்கள் மேற்கோளாக காட்டி உள்ளார். கோடை பண்பலை வானொலியின் நேரடி ஒளிபரப்பில் 23-03-2006 அன்று பங்கு பெற்று இவரது கவிதைத் துறை சாதனைகளை விளக்கி உள்ளார். இவரின் அய்க்கூ கவிதைகளை சென்னை இலெயோலா கல்லூரி மாணவர் இரவிக்குமார் ஆய்வு செய்து ஆய்வேடு சமர்ப்பித்து உள்ளார். மதுரை காமராசர் பல்கலைக் கழக மாணவர்கள் பலர் ஆய்வு செய்து வருகின்றனர்.

29-06-2005 அன்று குடியரசுத் தலைவர் மேதகு அப்துல்கலாம் அவர்களை நேரடியாக திருச்சியில் சந்தித்து அவரது பாராட்டைப் பெற்றுள்ளார். கவிமலர்டாட் காம் இணைய தளத்தின் மூலம் சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரைக்கு பெருமை சேர்த்து வருகிறார் கவிஞர் இரா. இரவி.


மலர் 15 – இதழ் 3

ஏழைதாசன்

எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும்
திருவள்ளுவர் ஆண்டு 2037 கார்த்திகை

**கட்டண விபரம்**

| | |
|---|---|
| ஆண்டுக் கட்டணம் | : ரூ. 60/- |
| வாழ்நாள் கட்டணம் | : ரூ. 600/- |
| புரவலர் நன்கொடை | : ரூ. 1000/- |
| **வெளிநாடு (வான்வழி)** | |
| ஆண்டுக் கட்டணம் | : US$ 10 |
| வாழ்நாள் கட்டணம் | : US$ 100 |
| புரவலர் நன்கொடை | : US$ 200 |
| **விளம்பரக் கட்டணம்** | |
| வெளிநாடு | |
| முழுப்பக்கம் | : ரூ. 1000/- |
| அரைப்பக்கம் | : ரூ. 500/- |
| உள்நாடு | |
| முழுப்பக்கம் | : ரூ. 500/- |
| அரைப்பக்கம் | : ரூ. 250/- |
| **பெயர்** | : EALAIDHASON |
| **வங்கி இலக்கம்** | : A/c No. 478171653 |
| **முகவரி** | : INDIAN BANK, PUDUKKOTTAI-622001, TAMILNADU, INDIA. |

கைபேசி அழைப்புகள்

## "பன்னாட்டுத் தமிழர்கள் அறிய..."

பாரீசு பார்த்தசாரதி பேசுகிறேன். வணக்கம். பிரான்சிலே பல நண்பர்கள் ஏழைதாசனை அறிந்திருக்கிறார்கள். குறிப்பாக கவிஞர் கி. பாரதிதாசன், தசரதன், அலன் ஆனந்தன், தமிழ் நெஞ்சம் அமீன், கவிஞர் வண்ணை தெய்வம் போன்றவர்கள். நூல் வெளியீட்டு விழா ஒன்றில்கூட வண்ணை தெய்வம் உங்களை விசாரித்தார். புதுச்சேரியில் உங்களை சந்தித்தது இன்னும் நன்றாக நினைவிருக்கிறது. மலேசியாவுக்கு இலக்கிய நிகழ்ச்சிக்கு சென்றபோது புலவர் என்.பெருமாள் பாகு. சண்முகம் இருவரும் ஏழைதாசன் ஆண்டுக்கட்டணம் ரூ. 1000/- தந்தார்கள் புதுச்சேரியிலிருந்து வரைவோலை எடுத்து அனுப்பி வைக்கிறேன். விழா நிகழ்ச்சிப்படமும்செய்தியும் அனுப்புகிறேன். வழக்கம் போல் வெளியிட்டு உதவுங்கள். ஏழைதாசனில் வெளிவந்தால் பன்னாட்டுத் தமிழர்கள் அறிய உதவும் இல்லையா ! எனவே, தவறாமல் மாதந்தோறும் எமக்கு வாய்ப்பு வழங்கக் கோருகிறேன். விரைவில் எனது அன்பளிப்போடு ஆண்டுக் கட்டணமும் சேர்த்து உங்களை வந்தடையும். நன்றி, வணக்கம்.

## "எங்களுக்கெல்லாம் மகிழ்ச்சி"

வணக்கம். நான் நோர்வேயில் இருந்து நல்லையா சண்முகப் பிரபு பேசுகிறேன். நாம் நீண்ட கால நண்பர்கள். நீங்கள் சுகமாக இருக்கிறீர்களா ! நாங்கள் இங்கே நல்ல சுகம். சென்ற மாதம் கனடா சென்றிருந்தேன். செந்திசெல்லையா உங்களை மிகவும் கேட்டார். எமது சர்வதேசத் தமிழர் இதழ் குறித்தும் தொலைபேசி அழைப்பு விபரமும் அடிக்கடி வெளியிட்டு பெரிய அளவில் பலரும்படித்து தெரிந்து கொள்ள வசதி பண்ணிகொடுத்து இருக்கிறீர்கள். கனடாவில் நூல் வெளியீட்டு விழாவில் பல ஈழத் தமிழ் எழுத்தாளர்களோடு நானும் கலந்து கொண்டேன். நோர்வேயில் இருந்து உங்களுக்கு சர்வதேசத் தமிழர் இதழின் கவிதைச் சிறப்பிதழ் அனுப்பச் சொல்லியிருந்தேன். கிடைத்ததா ? அதை நல்ல முறையில் உங்கள் வாசகர்களுக்கு அறிமுகம் செய்து மதிப்புரை எழுதுவீர்கள் தானே ! ஏழைதாசன் மிகச் சிறந்த முறையில் உலகத் தமிழர்களின் ஒப்பற்ற குரலாக ஒலித்து வருவது எங்களுக்கெல்லாம் மிகுந்த உற்சாகத்தை தந்து கொண்டிருக்கிறது. இன்னும் பக்கங்களை கூடுதலாக்கினால் என்ன? அனைவருக்கும் நல்வாழ்த்துக்கள், நன்றி, வணக்கம்.

# MODERN HAIKU

## மாடர்ன் அய்க்கூ (ஆங்கிலம்)

## * இதழ் மதிப்புரை *

37 ஆண்டுகளாக அமெரிக்காவில் இருந்து வெளிவருகிறது இவ்விதழ். கடந்த 4 ஆண்டுகளாக நமக்கு தொடர்ச்சியாக கிடைக்கப்பெறுகிறது. காலாண்டு இதழான இச்சஞ்சிகை முழுவதும் அய்க்கூ கவிதைகளுக்காகவே நடத்தப்படுவது இதன் சிறப்பு.

அமரர் இராபர்ட் ஸ்பைஸ் (Robert Spiess) உயிருடன் இருந்தபோது நமக்கு முதல் மாடர்ன் அய்க்கூ இதழ் அனுப்பி வைத்தார். அவர்பின் வந்த லீ குர்கா (Lee Gurga) 2006 இல் ஆசிரியராகப் பொறுப்பேற்ற சார்லஸ் ட்ரம்புல் (Charless Trumbull) தொடர்ந்து இதழ் அனுப்புகிறார்கள்.

ஓர் இதழ் விலை ரூ. 500 [10 டாலர்] அஞ்சல் செலவு ரூ. 250/- [5 டாலர்] உலகில் உள்ள பன்னாட்டு அய்க்கூ கவிஞர்கள் இவ்விதழில் பங்கேற்று அய்க்கூ படைக்கிறார்கள்.

இயற்கை, அழகியல், தத்துவம், புதுமைச் சிந்தனைகள், கருத்துக்கள், அனுபவங்கள் என ஒவ்வொரு பக்கமும் விரவிக் கிடக்குகின்றன. தமிழ்நாட்டுத் துளிப்பாக்களில் காணப்படும் வறுமை, அரசியல், வேலையின்மை, கள்ளக்காதல் பற்றிய பாடுபொருளே இவர்களிடம் இல்லை எனலாம்.

தன்னிறைவு பெற்ற அக்கவிஞர்களுக்கும் நமக்கும் இதுதான் பெருத்த இடைவெளியாகும். என்றாலும் அன்பு, காதல், ஈகை, இரக்கம் எல்லோருக்கும் ஒன்றாகத்தான் உள்ளது.

இவ்விதழ் சந்தாதாரர்களிடம் நுழைவுக்கட்டணம் பெற்று, அய்க்கூப் போட்டி நடத்தி பரிசு வழங்குகிறது. அய்க்கூ ஆதரவாளர்கள் ஒன்று கூடி விழா கொண்டாடுகிறார்கள்.


ஆய்வுக் கட்டுரைகள், புத்தக மதிப்புரைகள், அய்புன், அய்க்கூ, சென்றியூ என 96 பக்கங்களில் வழவழப்பான வெள்ளைத்தாளில் மிளிர்கிறது.

இவ்விதழ் ஆசிரியர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, மொழிபெயர்ப்பாளர்கள் எவரேனும் முன்வந்தால் நமது அய்க்கூக்களும் மாடர்ன் அய்க்கூக்களில் இடம்பெற வைக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு 15ஆம் பக்கம் பாருங்கள்.

Journal Review :

S. VIJAYAKUMAR B.A., Editor "Ealaidhson"




First Wrapper



Back Wrapper

MODERN HAIKU VOLUME 37.3 AUTUMN - 2006


modern
# HAIKU
**AN INDEPENDENT JOURNAL OF HAIKU AND HAIKU STUDIES**


## MODERN HAIKU


| | |
|---|---|
| *Charles Trumbull* | *Editor* |
| *Lidia Rozmus* | *Art Editor* |
| *Randy M.Brooks* | *Web Editor* |
| *Paul Miller* | *Book Review Editor* |
| *David Burleigh* | *Assistant Editor* |
| *Margret Trumbull* | *Business Manager* |
| *Lee Gurga* | *Consulting Editor* |



Postal Address :

**Modern Haiku • Po.Box No. 7046 • Evanston • IL 60204 - 7046 • U.S.A.**

**Web side : <www.modernhaiku.org>**


## Subscriptions

The 2007 subscription rate is $26.00, Which includes delivery by bulk mail in the U.S; add $5.00 for first-class U.S. mail. Airmail delivery to Canada and Mexico is $31.00; elsewhere in the western Hemisphere, Europe, Africa, and Asia is $39.00; and $45.00 to the Pacific Rim (Japan, Australia, New Zealand). Individual copies are $10.00 postpaid in the U.S, $12.00 in Canada and Mexico, $14.00 in Europe, and $16.00 elsewhere.


Publication of this issue is partially supported by a grant from the illinois Arts Council, a State agency

EALAIDHASON *TAMIL MONTHLY * R.N.I. Regd No. 55308 / 92
R.C. No. 22449/98 * Postal Registered No. TN/PDK/03/06-08

# மியான்மா (பர்மா)த் தமிழர் அறநெறிக் கழகத் தலைவர் கோ. கலைச்செல்வனுக்குப் பாராட்டு விழா




சென்னையில் நடந்த தாயகம் திரும்பியோர் சந்திப்பு விழாவில் 'பாட்டன் தமிழை வீட்டில் பேசுவோம்' என்ற முழக்கத்தை முன்வைத்து தமிழ்ப்பணி ஆற்றிவரும் மியான்மா (பர்மா)த் தமிழர் அறநெறிக் கழகத் தலைவர் **கோ. கலைச்செல்வன்** அவர்களுக்கு வரவேற்பும் பாராட்டும் தெரிவிக்கப்பட்டது. மேடையில் புத்த துறவிமார் ஒருவருடன் **குமரி அனந்தன்**, மறுமலர்ச்சி திராவிட கழகத் தாயகத்தின் கவிஞர் **தாயன்பன்** மற்றும் பலர் உள்ளனர்.

பெறுநர் திரு.

Published Printed and Owned by S. Vijayakumar
Printed at Ealaidhason Printers, Pudukkottai - 2. Published from 26, Adappanvayal 8th Street, Pudukkottai - 2, Tamil Nadu, INDIA. Editor: **S. VIJAYAKUMAR** B.A.,
✆ **Cell No. 94 42 77 68 68** ✆ Telephone No. **0091 - 04322 - 226 426**